விட்டிருக்கிறார். ஆகவே, அந்த உத்தரவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசாங்கமும் மேல் நடவடிக்கை எடுக்கும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது.

பொள்ளாச்சி அரசினர் மருத்துவமனை

*190 வினா—திரு. அ. ப. சண்முகசுந்தரம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி நகராட்சி மன்றம் பொள்ளாச்சி அரசினர் மருத்துவ மனைக் கட்டட நிதிக்கு நன்கொடையாக ரூபாய் ஒரு லட்சம் கொடுப்பதற்கு அரசிடம் அனுமதி கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான அனுமதி கொடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம். 18—11—1971-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 2552-ல் அதற்கான அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

திருக்குறள் ஆராய்ச்சி

* 191 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகத் தமிழ் மாநாட்டின் வருவாயிலிருந்து திருக்குறள் ஆய்வுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்விதம் பயன் படுத்தப்படுகிறது ?

(இ) அதிலிருந்து தனி நபருக்கும் உதவித் தொகை வழங்கப் படுகிறதா ?

(உ) ஆம் எனின், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) நமது மாநிலத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களும், மூன்று லட்ச ரூபாயைப் பயன்படுத்தித் தகுதி பெற்ற விரிவுரையாளர்களை நியமித்து ஆராய்ச்சி நடத்தி வருகின்றது.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

Sacred Hearts School at Palayamkottai

* 192 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether Sacred Hearts School, Palayamkottai, is exempted from general guidelines for selection of candidates for training; and

(b) if so, the reasons therefor?

1971 டிசம்பர் 9]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) "சேக்கிரட் ஹார்ட்" என்ற பெயரைக் கொண்ட தனியார் பயிற்சிப் பள்ளி எதுவும் பாளையங்கோட்டையில் இல்லை. தனியார் பயிற்சிப் பள்ளி எதற்கும் விதிவிலக்கு கொடுக்கப்படவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்தத் தனியார் பள்ளிகள் பூராவுக்கும் 300 மார்க்குகளுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் அனுமதி வழங்கப்படும் என்று இருக்க பாளையங்கோட்டையிலுள்ள இந்த கிறித்தவக் கல்லூரியில் மட்டும் ஹைகோர்ட் உத்தரவு என்ற காரணத்தினால் அவர்கள் இஷ்டப்படி மாணவர்களை எடுத்துக் கொள்ளலாம் என்ற ஒரு விதி இருக்கிறது என்று அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே. ஏற்கனவே 250 மார்க்குகள் இருக்க வேண்டுமென்ற ஒரு விதிமுறை யிருந்தது. பிறகு 300 என் என்று ஆக்கினோம். அந்த வகையிலே கூட 1969-70-ஆம் ஆண்டில் தனியார் பயிற்சிப் பள்ளிகளும், அரசினர் பயிற்சிப் பள்ளிகளைப் போல, தாங்கள் தேர்ந்தெடுத்த மாணவர்களின் பட்டியலையும் முதன்மை கல்வி அதிகாரியும், அலுவல் சார்பற்ற அங்கத்தினரையும் கொண்ட பரிசிலனைக் குழுவிற்கு அனுப்பி அதன் ஒப்புதல் பெற வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவ்வாணையை எதிர்த்து, பாளையங்கோட்டை யில் உள்ள கிருஸ்துராஜா ஆதாரப் பயிற்சிப்பள்ளி நிர்வாகி, ஹைகோர்ட்டில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்தார். நீதிபதிகள் அதை விசாரித்து, அதை அவர்கள் சிறுபான்மையோரின் உரிமை யில் தலையிடுவதாகும் என்று தீர்ப்பளித்தார்கள். ஆகவே, அந்தக் குழுவிற்கு அறிவிக்க வேண்டுமென்ற முறை இப்பொழுது கை விடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த முறையே வைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் 300 மார்க்குகள் என்பது வற்புறுத்தப் பட்டு, 300-க்கு மேலேதான் இருக்க வேண்டும் என்ற முறையில் 300-க்கு மேலேயிருந்து சேர்ப்பவர்களை அவர்கள் விருப்பப்படி சேர்க்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், 300 மார்க்குகளுக்கு மேலே யிருப்பவர்களை, அரசினால் நடத்தப்படும் பள்ளிகளிலே அவர்கள் எந்த அளவிற்கு அதிக மார்க் வாங்கியிருக்கிறார்களோ அந்த முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட தனியார் பள்ளிகளிலே 300 மார்க்குகளுக்குமேல் 350 மார்க்குகள் வாங்கியவர்கள்கூட சிலசமயங்களில் தேர்ந்தெடுக்கப்படாமல் 310 மார்க்குகள் எடுத்தவர்கள்கூட தேந்தெடுக்கப்படும் நிலையிருக் கிறதே. ஆகவே அரசுப் பள்ளிகளிலே எப்படித் தேர்ந்தெடுக்கப் படுகிறார்களோ அந்த முறையில் செலக்ட் செய்ய தாக்கீது அனுப்பப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த நோக்கத்தை நிறைவேற்றத்தான் குழுவின் பரிசிலனைக்குக் கொண்டுவர வேண்டுமென்று உத்தரவிட்டோம். அதை எதிர்த்து ரிட் போட்டார்கள். அதிலே தலையீடு கூடாது என்று நீதிமன்றம் தெரிவித்தது. எனவே, அதிலே தலையிட முடியவில்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அளிக்கப்பட வேண்டிய சதவிகிதத்தை அளிக்கிறார்களா என்று தான் பார்க்க வேண்டும்.

திரு. எ. சுவாமிதாஸ்: சார், இந்த மிஷினரிகள் நடத்தும் பாடசாலைகளிலே அவர்களுக்கு ஆர்பனேஜஸ் வைத்து அதாவது அனாதைக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து தொழில் பயிற்சி கொடுக்கிறார்கள். சிலர் அப்படிப் பயிற்சிப் பள்ளிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பொழுது 300 மார்க்குகள் இருக்க வேண்டு மென்றாலும் சிலவேளைகளில் அவர்கள் அதற்குக் குறைந்த மார்க் எடுத்திருக்கலாம், ஆகவே இப்படிப்பட்ட அனாதைக் குழந்தை களுக்கு 300 மார்க் என்பதைத் தளர்த்தி அதற்குக் குறைந்த மார்க் எடுத்திருந்தாலும் அவர்களுக்குப் பயிற்சிப் பள்ளிகளில் இடம் கிடைக்கும் அளவிற்கு ஒரு நியதியை இந்த அரசு ஏற்படுத் துமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைப் பற்றியது. அவர்கள் பயிற் சிக்குப் பிறகு அவர்கள் பயிற்சி பெற்ற பிறகு சொல்லிக் கொடுக்க வேண்டும். எனவே அவர்களின் தரம் உயர வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் 300 என்று வைக்கப்பட்டிருக் கிறது. எனவே அனாதைக் குழந்தைகளாக இருப்பவர்களுக்கு இந்தச் சலுகை தர முடியவில்லை. அவர்கள் வேறு வேலைக்குப் போக வேண்டுமென்றால் போகலாம். எல்லா அனாதைப் பிள்ளைகளும் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி ஒன்றை மட்டுமே நம்பியிருக்க முடியாது. அவர்கள் மார்க் குறைவாக வாங்கியிருக்கிறார்கள் என்றால் பல்வேறு வேறு வேலைகள் இருக்கின்றன. எனவே 300-க்குக் குறைவாகயிருந்தால் தரம் கெட்டுப் போகிறது என்பதால்தான் 250 என்பது 300 ஆக ஆக்கப்பட்டது.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள், 300 மார்க் சிஸ்டம் வந்தவுடன் அதைப் பூர்த்தி செய்ய முடிய வில்லை என்ற வதந்தி வருகிறதே, அது அரசுக்குத் தெரியுமா ? அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட இடர்ப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் ஏராளமான விண்ணப்பங்கள் வந்து சதவிகிதத் தினுடைய அளவிற்குப் பொறுக்கி எடுக்கப்படுகிறது. தனிக்கேள்வி போட்டால் எந்த அளவிற்கு இருக்கிறது, இடர்ப்பாடு இருக்கிறதா என்று சொல்ல முடியும்.